---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொடன்கொட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தொடன்கொட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.6 பந்தியின் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றில் சகல விடயங்களுக்காகவும் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனங்கள, பொறிகள் மற்றும் உபகரணங்கள், மூலதன செலவின மாணியத்திற்காக முன்னைய ஆண்டின் பெறுமதிக்கு பதிலாக 2022 ஆம் ஆண்டில் பெறுமதியிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் முன்னைய ஆண்டின் திரண்ட மிகையாக ஏனைய பெறுமதியில் காண்பிக்கப்பட்டதுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் முன்னைய	2025 ஆம் அண்டின் போது நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

	ஆண்டில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.28 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் ரூபா 4,995,850 மிகையில் சீராக்குவதற்கு பதிலாக முதலீட்டு வருமானமாக ரூபா 4,417,780 சீராக்கப்பட்டிருந்தது.	பணமாக கிடைத்த வட்டி சீராக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	2021 சனவரி 22 ஆம் திகதிய இலக்கம் எல்ஜீடீ/10/ஏ/4/ந.கி/2019 என்ற உள்ளூராட்சித் திணைக்களம் (மே.ம) கடிதம் மூலம் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகள் குறிப்பிடுவதற்கு தனியாக நிரல் ஒன்று ஈடுபடுத்தப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2024 திசெம்பர் 31 இல் ரூபா 347,039,036 ஆன ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகள் மீதி திரண்ட மிகையின் ஆரம்ப மீதியில் சீராக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படும்.	தொடர்புடைய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,826,157 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,483,543 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	7,330,000	7,508,263	7,481,783	923,626	5,650,000	5,918,307	5,388,770	915,621
ii.	வாடகை	2,118,200	2,613,550	2,605,600	45,750	1,468,200	1,440,600	1,440,350	37,800
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	300,000	299,400	299,400	-	1,550,000	1,628,800	1,630,750	-
iv.	ஏனைய வருமானம்	150,000	57,300	57,300	-	-	-	-	-
		9,898,200	10,478,513	10,444,083	969,376	8,668,200	8,987,707	8,459,870	953,421

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**ஆதனவரி** ஆதனவரி தொடர்பான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ஆதனவரி உரிமையாளர்கள் 827 பேர்களிடம் இருந்து ஒரு ஆண்டு காலமாக அறவிட வேண்டிய நிலுவை ரூபா 445,269 உம், ஆதனவரி உரிமையாளர் 132 பேர்களிடம் இருந்து 02 வருட காலமாக ரூபா 183,062 உம், 130 ஆதனவரி உரிமையாளர்களிடம் இருந்து 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து ரூபா 156,854 உம், 64 ஆதனவரி உரிமையாளர்களிடம் இருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற நிலுவை ரூபா 98,118 உம் ஆகும்.	நிலுவைப் பணத்தை செலுத்துவதற்காக அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	**அனுமதிப் பத்திரக் கட்டணம்** தொடன்கொட பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குரிய இலங்கை சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 03 ஹொட்டல்கள் காணப்பட்ட போதிலும் ஒரு ஹொட்டலில் இருந்து மாத்திரம் அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.	எடுக்கப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டமையால் மீண்டும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மேற்படி
(இ)	**நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்து, ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற் வேண்டி இருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 12,500,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 92,922,758 ஆகும்.	பட்டோலைகள் தயாரித்து வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)(i)	இலங்கை சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்துள்ள க்லன்ரோஸ் விடுமுறை விடுதியினால் சபைக்கு அனுமதிப் பத்திரக் கட்டணம் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டமைக்கு எதிராக 2023 மார்ச் 14 ஆந் திகதி தொடரப்பட்ட வழக்கு முறையாக மேற்கொள்ளப்படாமையினால் 2024 ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டதுடன் அந்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கின்ற முறை தொடர்பாக சரியான வழிகாட்டி ஒன்று மீளாய்வாண்டு வரையும் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது.	உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் அடிப்படையில் செயற்படுத்தல் வேண்டும்.
(ii)	க்லன்ரோஸ் விடுமுறை விடுதி நீண்ட காலம் முதல் அனுமதிப் பத்திரம் பெறாமல் வியாபார	எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு	தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை

	நடவடிக்கைகளை நடாத்திச் சென்ற போதிலும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் அந்த வளவில் 2019 ஆம் ஆண்டின் போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கான திட்டம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் தரச் சான்றிதழ் விநியோகித்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதவியணியினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	எடுத்து நட்டம் அறவிடப்படல் வேண்டும.
(ஆ)	பெறுமதி மற்றும் அளவுகள் குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்படாத 49 காணிக் கூறுகள் தொடர்ந்தும் இனங்கண்டு பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆதனவரி மதிப்பீடு செய்து கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
தொடன்கொட பொது சந்தைக் கட்டிடத் தொகுதியில் கடை இலக்கம் 12 மற்றும் 13 மீளாய்வாண்டின் மார்ச் முதல் வாடகைக்கு வழங்காமல் விளைவற்றுக் காணப்பட்டது.	மதிப்பீடு தாமதமடைந்ததன் அடிப்படையில் பெறுகைகள் தாமதம் அடைந்திருந்தது.	கடைகளை வாடகைக்கு வழங்குதற்கு நடவடிக்கை எடுத்து வருமானத்தை அறவிடுவதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2016 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்படுகின்ற மோட்டார் கிறேடரை விற்றுத் தீர்ப்பதற்காக 2023 மே மாதம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விற்றுத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் அதற்குரிய நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	லோமன்ட்வத்த 31.26 பேர்ச் அளவான பொதுக் காணியின் அளவிடல் நடவடிக்கைகளுக்காக ரூபா 60,000 செலவிடப்பட்டிருந்ததுடன் 2024 யூலை 14 ஆந் திகதிய நில அளவையாளர் அறிக்கையின் இலக்கம் 1697 என்ற நில வரைபடத்தின் கூறு இலக்கம் 14 மற்றும் இலக்கம் 1697 A என்ற நில வரைபடத்தின் கூறு இலக்கம் 22 இல் 02 அனுமதியற்ற நிர்மாணங்கள் காணப்படுகின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.	அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்காக முதலாவது அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.	அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுத்து சபைக்கு சொந்தமான ஆதனங்களைப் பாதுகாத்தல் வேண்டும்.
(ஆ)	சபையினால் பராமரித்து பேணிச் செல்லப்படுகின்ற தெவுவன சனசமூக மண்டபம் மற்றும் பொது நூலகம், நேபட பொதுச் சந்தைக் கட்டிடம் மற்றும் பொது நூலகம், போம்புவல விளையாட்டரங்கு, பொது நூலகம் மற்றும் சுடலைக் கூடம் அமைந்துள்ள காணிகளின் உரிமைத் தன்மை சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச இணைப்புக் குழுவிற்கு கோரிக்கை விடப்பட்டு நடவடிக்கை களைத் துரிதப்படுத்துவதற்க நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிமைத் தன்மையை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபைக்குரிய 53 காணிகள் சபையின் பெயரில் கையேற்பதற்காக 2023 ஆகஸ்ட் 03 ஆந் திகதி கையளித்தல் கட்டளை பெற்றுக் கொள்வதற்கு பிரதேச செயலாளரிடம் இருந்து கோரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிமைத் தன்மையை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	தொடன்கொட பிரதேச செயலகத்தால் 2019 மார்ச் 07 ஆந் திகதி உடன்படிக்கை மூலம் பிரதேச சபைக்கு டெக்டர் மற்றும் பௌசர் தற்காலிகமாக கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம்	தொடன்கொட பிரதேச செயலகத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.	மீணடும் கையளிப்பதற்கோ அல்லது அதன் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மாத்திரம் சபையினால் மேற்கொள்ளப்பட்டதுடன் 04 வருடங்கள் கடந்த பின்னர் அதனை மீண்டும் கையளிப்பதற்கோ அல்லது அதன் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(உ)	தொடன்கொட பிரதேச சபைக்காக 1970 ஏப்ரல் 09 ஆந் திகதி கையளித்தல் கட்டளை மூலம் மயாண நிலமாக கையளிக்கப்பட்ட இலக்கம் 808 துடுகல மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 03 ஏக்கர் 26 பேர்ச் அளவான கட்டுக்குறுந்துகல்பொத்த காணியின் ஜீ.பீ.ஏ.166 காணிக்கூறு இலக்கம் 02 இல் 10 வருடத்திற்கு முன்னிருந்து 02 தரப்பினரால் நிரந்தர வீடுகள் அமைத்து ஒரு ஏக்கர் அளவிலான பிரதேசத்தில் மிளகாய் பயிச் செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதனை தீர்த்து சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து சபைக்குச் சொந்தமான ஆதனங்களை பாதுகாத்தல் வேண்டும்.
(ஊ)	2021 ஆம் ஆண்டில் 10 காணிக் கூறுகள் கைப்பற்றுவதற்காக பிரதேச செயலகத்திற்கு ரூபா 2,501,500 முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணியை கைப்பற்றுதல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	காணிக் கைப்பற்றல் பூர்த்தி செய்யப்பட வில்லை.	காணியை கைப்பற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பொதுக் காணி மற்றும் மயான நிலங்களுக்காக பாதுகாப்பு வேலி மற்றும் நுழைவு வாயில் நிர்மாணித்தல், பொதுக் காணிகளை சட்ட	தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டமையால்	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ரீதியாக்குதல், வீதி பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் சபுகஹவத்த பொதுச் சந்தைக் கூரையை நிர்மாணித்தல் போன்ற செயற்திட்டங்களுக்காக முறையே ரூபா 300,000 தொகை, ரூபா 750,000 தொகை, ரூபா 4,000,000 மற்றும் ரூபா 7,500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பொதுச் சந்தைக் கூரை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுது பார்க்கப்படாது இருந்ததுடன் ஏனைய செயற்திட்டங்களுக்காக முறையே ரூபா 133,925 தொகை, ரூபா 2,104,983 மற்றும் ரூபா 185,000 மாத்திரம் செலவிடப்பட்டமையால் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றுவதற்காக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முடியாது இருந்தது.